# இஸ்லாமியப் பார்வைக்குள் படைப்பிலக்கியம்

அஷ்ஷைக் எம்.ஏ.ஹபீழ் ஸலபி,ரியாதி (M.A)

தொடர் - 09

**அல்குர்ஆன் ஓர் இறையருள் இலக்கியம்**

அல்லாஹ்வினால் அருளப்பட்ட அல்குர்ஆன், இயற்கை அழகை உயிர்த்துணர்ந்து, அதை உள்ளவாறே வெளிப்படுத்துவதை தடுக்கவில்லை. அழகை ஆராதிக்கவும் அதை ஆழ்ந்து உணரவும் படிப்பினை பெறவும் தூண்டும் ஒரே வேதம் அல்குர்ஆன் மட்டுமாகத்தான் இருக்கிறது. அல்குர்ஆனின் மொழிமாற்றத்தை மேலோட்டமாக மட்டும் படிப்பவர்கள் கூட இதை மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

பிரபஞ்சம் முழுவதும் பரந்து, விரிந்து, பொலிவுற்றுக் கிடக்கும் காட்சிகளை இரசிக்க வேண்டுமென அகில மக்கள் அனைவருக்கும் அல்குர்ஆன் அழைப்பு விடுக்கிறது.

*“அவனே படைத்தான். ஒழுங்குற அமைத்தான்.*

*அவனே நிர்ணயித்தான். வழி காட்டினான்.*

*அவனே மேய்ச்சலுக்குரியதை வெளிப்படுத்தினான்.*

*பின்னர் அவற்றை உலர்ந்த கூளங்களாக்கினான். ” (அல்குர்ஆன 87:2-5)*

இவ்வாறு, அல்லாஹ் அகிலத்தின் அனைத்தையும் அழகிய முறையில் சிருஷ்டித்துள்ளான். மொத்தமாக பிரபஞ்ச அழகுகளின் பக்கம் அழைப்பு விடுத்த அல்குர்ஆன், அதன் ஒவ்வொரு பகுதியை நோக்கியும் அழைப்பு விடுக்கிறது.

நாம் காணும் மிகப் பிரமாண்டமான இப்பிரபஞ்சம், அதனைச் சுற்றியுள்ள விரிந்த வான் வெளி, பசுமயாய்ப் பரந்த பூமி, வானத்தில் கண் சிமிட்டி, ஒளியைச் சிந்தும் விண்மீன்கள், கருமையைப் போர்வையாகக் கொண்ட காரிருள், கிழக்கு வெளுத்ததோடு, உதயமாகும் பகற்பொழுது, வானிலிருந்து ஓங்கார இரைச்சலோடு பெய்யும் பெருமழை,மெல்லிய இதழ்களில் விழும் பனித்துளி, கண்ணைப் பறிக்கும் மின்னல், காதைத் துளைக்கும் பேரிடி, பச்சைப் பசுமையான வயல்வெளிகள், கனி நிறைந்த அழகு ததும்பும் தோட்டங்கள், ஆண்-பெண் உறவு, குடும்ப வாழ்வு, சமூக, அரசியல், பொருளாதார அடிப்படைகள், பண்பாடு, நாகரீகம், வரலாற்றின் வளைவு நெளிவுகள்,முன்னைய சமுதாயங்களின் வரலாற்று முடிவுகள், மறுமையில் மனிதன் சந்திக்கவுள்ள மறு உலக வாழ்வின் நிகழ்ச்சிகள்,இன்பங்கள்-துன்பங்கள் போன்ற அனைத்தையும் மிகவும் தத்ரூபமாக, உணர்ச்சியும் உயிரோட்டமும் கொண்ட அழகு நடையில் அல்குர்ஆன் விளக்குகிறது.

இந்த உண்மை அழகை ஆராதிக்கத் தெரியாத இலக்கியவாதிகளும், சித்தாந்த சிந்தனை வாதிகளும் இலக்கியத்தின் முழுமைத்துவத்தை, வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் தழுவி நின்று, அதன் சம்பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, ஒவ்வொரு சித்தாந்தவாதியும் தனது சித்தாந்தத்தில் அதனைச் சிறையிட்டு விட்டான்.

இதனை, எகிப்தியப் பெண் கவிஞை அலியக் ஐவூர் குறிப்பிடும் போது, *“மதச் சார்பற்றோர், கம்யூனிஸ்டுகள் கையில் மட்டுமே இந்த இலக்கியத்தை விட்டு விட்டு, அவர்களை ஏசித் தொலைப்பதும், அல்லது அழுது வடிப்பதும் பொருத்தமானதல்ல”* என்கிறார்.

மார்க்ஸியவாதிகள் வர்க்கப் போராட்டத்தின் பின்னணியில், யதார்த்த வாதத்தின் அடிப்படையில் இலக்கியப் பணியை ஆரம்பித்தனர். கடவுளை மறுத்த இவர்களின் இலக்கியம் இலக்கற்றதாக மாறியது. இன்று இவர்களும் திக்கற்றுத் திரிகின்றனர்.

சிக்மன் புரோய்டும், அவர் சிந்தனை வழிவந்தோரும் பாலுணர்வின் பகைப்புலனில் கலை, இலக்கியம் பற்றிப் பேசினர். முதலாளித்துவவாதிகள் தனிமனிதச் சுதந்திரத்தின் சிறப்புப் பற்றி இலக்கியத்தில் சிலாகித்தனர்.

ஆனால், அவை அனைத்திற்கும் அப்பால் நின்று, அல்குர்ஆன் மனித சமுதாயத்திற்கு இறைவனின் வழிகாட்டுதல்களைப் பொதிந்த உன்னத வேத நூலாக விளங்குகிறது, அதன் கருத்துக்களை விளக்கும் வகையினைப் பொறுத்தளவில் மிகமிக உன்னதமான தெய்வீக இலக்கியமாகக் கருதப்படும் நிலையைப் பெற்று மனிதனின் அனைத்துப் பிரச்சினைக்குமான தீர்வாக விளங்குகிறது.

இருளிலிருந்து முழு மனித குலத்தையும் ஒளியின் பக்கம் அழைத்துச் செல்லும் வலிமையான போதனை இஸ்லாமிய மூலாதாரங்களான அல்குர்ஆன் - சுன்னா ஆகிய இரண்டில் மட்டுமே உள்ளது என்பதை உலகம் மெல்ல உணர ஆரம்பித்துள்ளது.

*இன்னும் வளரும்*